**செய்தி வெளியீடு எண்: 163** **நாள்: 26.02.2020**

**செய்தி வெளியீடு**

**" மின்னணு முறையில் சந்தைப்படுத்தல்"**

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது.

தொழில் முனைவோர்களுக்காக, **"மின்னணு முறையில் சந்தைப்படுத்தல்" குறித்து** பயிற்சி, ஈக்காட்டுத்தாங்கல், பார்த்தசாரதி கோயில் தெருவில் அமைந்துள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் வரும் 28.02.2020 அன்று காலை 10.00 மணி முதல் 5.00 மணி நடைபெற உள்ளதால், தொழில் முனைவோர்கள், வருகை தந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்வதால் தற்பொழுது செயல்பாட்டிலுள்ள அனைத்து மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் பற்றியும் அவைகளை தொழிலில் எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

இப்பயிற்சியில் சேர விரும்பும் 18 வயது நிரம்பிய 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண் / பெண் இருபாலரும் சேரலாம். இப்பயிற்சியில் சேர விரும்புவோர் தங்கள் பெயரை நேரிலோ அல்லது தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் இணைதளம் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள்.

முன் பதிவு அவசியம்

| | |
|---|---|
| தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்,<br>சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல்,<br>சென்னை – 600 032. | 8668102600, 8668100336<br><br>www.editn.in |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**